# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:115** **தேதி:-11.07.2016**

***புதிய தொலை தொடர்பு அமைச்சராக திரு மனோஜ் சின்ஹா மற்றும் இதர செய்திகள்***

அன்பார்ந்த தோழர்களே,

சமீபத்தில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை மாற்றத்தில் புதிய தொலை தொடர்பு அமைச்சராக உத்திர பிரதேச மாநிலம், காஜிபூர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு மனோஜ் சின்ஹா அவர்கள் பொறுப்பு ஏற்றுள்ளார். IIT(BHU)வில் சிவில் என்ஜீனியராக பட்டம் பெற்று அதே நிறுவனத்தின் தனது M.Tech பட்டத்தையும் பெற்றுள்ளவர். புதிய தொலை தொடர்பு அமைச்சரை BSNL ஊழியர் சங்கம் வரவேற்கிறது.

**DIRECTOR(HR) மற்றும் CMD BSNL ஆகியோருடன் நடைபெற இருந்த சந்திப்பு தள்ளி வைப்பு:-** 08.07.2016 அன்று BSNL ஊழியர் சங்கம் DIRECTOR(HR) அவர்களுடனும், FORUMத்தின் CORE COMMITTEE தலைவர்கள் CMD BSNL உடனும் சந்திப்பதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் புதிய அமைச்சரை அவர்கள் சந்திக்க வேண்டி இருந்ததால் இந்த இரண்டு சந்திப்பும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

**6 தனியார் நிறுவனங்களுக்கு 12,500 கோடி ரூபாய்கள் கட்ட உத்தரவு:-** 2006 ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரைக்குமான காலத்தில் ஏர்டெல், ஐடியா, வோடோபோன், ரிலையன்ஸ், டாடா மற்றும் ஏர்செல் ஆகிய 6 தனியார் நிறுவனங்கள் தங்களின் வருவாயை 46,045.75 கோடி ரூபாய்கள் வரை குறைத்துக் காட்டியுள்ளனர். வருவாயில் பங்கீடு என்ற திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய 12,500 கோடி ரூபாய்களை இதன் மூலம் மட்டும் ஏமாற்றி உள்ளனர். இது தற்போது CAGயினால் கண்டு பிடிக்கப்பட்ட காரணத்தால் இந்த ஆறு தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களுக்கும் 12,500 கோடி ரூபாய்களை கட்ட தொலை தொடர்பு துறை கடிதம் அனுப்பியுள்ளது.

**JTO LICE தேர்வு முடிவுகள் வெளியாகியது:-** நமது மத்திய சங்கத்தின் தொடர் முயற்சியி ந் காரணமாக, 22.05.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் 08.07.2016 அன்று வெளியாகி உள்ளது. அதே சமயம் ஜூலை 2008க்கு பின்னர் பயிற்சிக்கு சென்ற TTA தோழர்களின் முடிவுகள் நீதிமன்ற வழக்குகளின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது உள்ளிட்ட சில குறைபாடுகள் நமது மத்திய சங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. இந்த அனைத்து பிரச்சனைகளையும் விரைவில் தீர்த்து வைக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என நமது மத்திய சங்கம் தெரிவித்துள்ளது. வெற்றி பெற்ற தோழர்கள் அனைவருக்கும் BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**மத்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தம் ஒத்தி வைப்பு:-** மூத்த மத்திய அமைச்சர்கள், திரு ராஜ்நாத்சிங், அருண் ஜேட்லி மற்றும் சுரேஷ் பிரபு ஆகியோருடன் நடைபெற்ற பேச்சு

வார்த்தைகளின் அடிப்படையில் மத்திய அரசு ஊழியர் சங்கங்களின் கூட்டு நடவ்டிக்கைக் குழுவான NJCAயின் தலைவர்கள் 11.07.2016 முதல் நடைபெற இருந்த வேலை நிறுத்தத்தை ஒத்தி வைத்துள்ளனர். NJCA வைத்துள்ள ஊதிய உயர்வு மற்றும் FITMENT உயர்வு ஆகிய பிரச்சனைகளை உயர் மட்டக் குழு ஒன்று பரிசீலித்து 4 மாத காலத்திற்குள் ஒரு முடிவு எடுக்கப்படும் என அமைச்சர்கள் உறுதி அளித்துள்ளனர். நிதி அமைச்சகம் இது தொடர்பாக பத்திரிக்கை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். இதன் அடிப்படையில் இந்த போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**PLI மற்றும் கேடர் பெயர் மாற்றக் குழுவின் கூட்டங்களை உடனடியாக கூட்டுக:-** PLI மற்றும் கேடர்களின் பெயர் மாற்றக்குழுவின் கூட்டங்களை முறையாக கூட்ட வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்துள்ளது. இந்த இரண்டுக் குழுக்களின் அமைப்பாளராக தற்போது உள்ள திரு A.M.குப்தா GM(Restg) அவர்களை BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாலர் 08.07.2016 அன்று சந்தித்து மேலும் தாமதமில்லாமல் இந்தக் கூட்டங்களை கூட்ட வெண்டும் என வற்புறுத்தினார். ஆயுத பூஜைக்கு இன்னமும் ஒரு சில மாதங்களே உள்ள காரணத்தால் புதிய PLI பார்முலா உடனடியாக உருவாக்குவது அவசியம் என நமது பொது செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார். இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க GM(Restg) உறுதி அளித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**